## தமிழ்நாடு அரசு

## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (செய்தி வெளியீடு) துறை
## பத்திரிகையாளர் நல நிதிய விண்ணப்பம்

1) விண்ணப்பதாரர் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் :

2) விண்ணப்பதாரர் முழுப்பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழில் எழுதவும்) :

3) முகவரி :

4) தொலைபேசி /கைபேசி எண் :

5) பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழ் இணைக்க வேண்டும்) :

6) பணிபுரியும் நாளிதழ் / பருவ இதழ் / செய்தி நிறுவனம் / தொலைக்காட்சி நிறுவனம் ஆகியவற்றின் பெயர் மற்றும் முழு முகவரி :

7) பதவி (பணிபுரியும் நிறுவனத்திலிருந்து சான்றிதழ் பெற்று இணைக்க வேண்டும்) :

8) முழுநேரம் உழைக்கும் பத்திரிகையாளரா ? :

9) பணி அனுபவம் :

10) பணிபுரியும் நிறுவனம் மருத்துவ உதவி நிதி வழங்கியிருப்பின், அதன் விவரம் :

11) நோயின் தன்மை :

12) சிகிச்சைக்கான தோராய மதிப்பீடு இணைக்கப்பட்டுள்ளதா ? :

13) சிகிச்சை மேற்கொள்ளும் மருத்துவமனை பெயர் மற்றும் முகவரி :

இடம்:

நாள்: கையொப்பம்

**குறிப்பு :**

படிவங்களில் விவரங்களை எழுதுவதற்கு இடம் குறைவாக இருந்தால், விவரங்களை தனியாக ஒரு காகிதத்தில் எழுதி, விண்ணப்பத்துடன் இணைக்கவும். அனைத்து விவரங்களையும் தவறாமல் பூர்த்தி செய்து, அதற்குரிய சான்றிதழ்களை இணைத்து விண்ணபதாரர் பூர்த்தி செய்த இரண்டு விண்ணப்பப் படிவங்கள் அனுப்ப வேண்டும்.

## பத்திரிகையாளர் நலநிதியம் மூலம் மருத்துவ உதவி நிதி பெற விதிகள்

1) மனுதாரர் முழுநேரம் உழைக்கும் பத்திரிகையாளராக பணிபுரிய வேண்டும்.

2) குறைந்தது 5 வருட பணி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

3) மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் வழியாக மனுவினை விண்ணப்பிக்க வேண்டும்.

4) மருத்துவ சிகிச்சை முடிந்த பிறகு அசல் பட்டியல்களுடன், மருத்துவ சிகிச்சை முடிந்த அறிக்கை அனுப்பிவைக்க வேண்டும்.

5) மருத்துவ சிகிச்சை மேற்கொண்ட மூன்று மாதத்திற்குள்ளாக விண்ணப்பிக்க வேண்டும்.

6) பத்திரிகையாளர்கள் மருத்துவ உதவி நிதி பெறுவதற்கு ஆண்டு வருமானம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

7) அரசு ஓய்வூதியம் பெற்றுவரும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ உதவி நிதி, தற்பொழுது முழுநேரம் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கும் உதவி நிதித் தொகையிலிருந்து 50 சதவிகிதத்தில் வழங்கப்படும்.

8) எந்தெந்த மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொள்ளலாம் மற்றும் எந்தெந்த நோய்களுக்கு மருத்துவ உதவி நிதி அளிக்கலாம் என்பதனை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் தமிழ்நாடு மாநில நோயாளர் அமைப்பு அவ்வப்போது வெளியிடும் அரசாணைகளின்படி பின்பற்றிவருவதையே பத்திரிகையாளர் மருத்துவ உதவி நிதி அளிப்பதற்கும் பின்பற்றபடும்.

9) நோயின் தன்மை மற்றும் சிகிச்சையின் செலவினத்திற்கு ஏற்றவாறு மருத்துவ உதவி நிதி ரூ. 1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) க்கு மிகாமல் வழங்குவது குறித்து, பத்திரிகையாளர் நல நிதிய பரிந்துரைக்குழு முடிவு செய்யும்.

### விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட சான்றிதழ்களை தவறாது இணைக்கப்பட வேண்டும்.

அ) பணிச் சான்றிதழ் / ஓய்வூதியம் பெறுவதற்கு ஆணையிடப்பட்ட அரசாணையின் நகல் (ஓய்வூதியம் பெறுபவராக இருந்தால் மட்டும்)

ஆ) வருமானச் சான்றிதழ்

இ) அனுபவ சான்றிதழ்

ஈ) இருப்பிட சான்றாக குடும்ப அட்டையின் நகல் / வாக்காளர் அடையாள அட்டை

உ) இரண்டு புகைப்படங்கள்

ஊ) மனுதாரர் எந்த நோயல் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை பற்றியும், அவருக்கு எத்தகைய சிகிச்சை / அறுவை சிகிச்சை தேவை என்பது பற்றியும் அங்கீகாரம் பெற்ற மருத்துவமனை சார்ந்த மருத்துவரிடம் தோராய மதிப்பீட்டுடன் (Tentative cost of the surgery) சான்றினை பெற்று மருத்துவர் மற்றும் மருத்துவமனையின் முத்திரையுடன் பெற்று (Round seal of the Hospital) மனுவுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.